செய்தி வெளியீடு எண்: 404 நாள் :30.07.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி வால்பாறை பகுதியிலுள்ள தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதிய உயர்வு வழங்குதல் தொடர்பாக முத்தரப்பு ஒப்பந்தம் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.கே.டி. பச்சைமால் அவர்கள் முன்னிலையில் இன்று (30.07.2013) கையெழுத்தானது. இக்கூட்டத்தில் தொழிலாளர் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு மோகன் பியாரே, இ.ஆ.ப., தொழிலாளர் ஆணையர் திரு. பி.சந்திரமோகன், இ.ஆ.ப., மற்றும் தொழிலாளர் நலத்துறை உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். இந்த பேச்சுவார்த்தையில் வால்பாறை தோட்ட அதிபர்கள் சங்க தலைவர் திரு. அருண்குமார், தமிழ்நாடு தோட்ட அதிபர்கள் சங்கம் சார்பில் திரு. ஸ்ரீதர் ஆகியோரும் தொழிற்சங்கங்கள் சார்பில் திரு. ஆறுமுகம், வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் (ஏஐடியுசி), திரு. வால்பாறை அமீது, அண்ணா தோட்ட தொழிலாளர் சங்கம், திரு. கருப்பையா (ஐஎன்டியுசி), திரு. எம். கண்ணன், புதிய தமிழகம் தோட்ட தொழிலாளர்கள் சங்கம் உள்ளிட்ட 23 தொழிற்சங்களின் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். இந்த ஒப்பந்தத்தின் பயனாக தோட்டத்தொழிலாளர்கள் 1.7.2013 முதல் தினம் ரூ.198/– ஊதியமாக பெறுவார்கள். மேலும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அகவிலைப்படி உயர்வுக்கும் (DA) இந்த ஒப்பந்தம் வழிவகை செய்கிறது. இந்த ஒப்பந்தத்தின் பயனாக சுமார் 1,50,000 தோட்டத்தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள்.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9